# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 133 | திங்கள் Monday | 10.08.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# த.வெ.க. அரசு தாக்கல் செய்த பொது, வேளாண்மை பட்ஜெட்டில் 'வெற்றி' பெயரில் 9 திட்டங்கள்



புதிய அரசுகள் பொறுப்பேற்கும்போது, முந்தைய அரசுகளின் திட்டங்களின் பெயர்களை மாற்றுவதும் அல்லது தங்களது கொள்கை அடையாளங்களை பிரதிபலிக்கும் வகையில் புதிய பெயர்களை சூட்டி பட்ஜெட்டில் அறிவிப்பதும் தமிழக அரசியலில் தொடர்ச்சியாக நடந்துவரும் ஒரு மரபாகவே பார்க்கப்படுகிறது.

அந்த வகையில் அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் பொதுமக்களுக்கு மலிவு விலையில் உணவுவழங்கும் திட்டம், உகந்த விலையில் மருந்தகங்கள், குடிநீர் மற்றும் சிமெண்டு, உப்பு வழங்கும் திட்டங்களுக்கு எல்லாம் 'அம்மா' என்ற பெயர் வைக்கப்பட்டன.

எடுத்துக்காட்டாக அம்மா உணவகம், அம்மா மருந்தகம், அம்மா குடிநீர், அம்மா உப்பு, அம்மா சிமெண்டு என்ற பெயரில் திட்டங்கள் உலாவந்தன. இதில் தற்போது அம்மா உணவகம் திட்டம் செயல்பாட்டில் இருந்து வருகிறது.

அதேபோல், தி.மு.க. ஆட்சிக்காலத்தில் 'கலைஞர்' என்ற பெயரில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. அதாவது, கலைஞர் கைவினைத் திட்டம், கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், கலைஞர் தலை மரக்கன்றுகள் நடும் திட்டம், கலைஞர் காப்பீட்டுத் திட்டம் போன்றவையெல்லாம் மக்கள் திட்டங்களாக அரசால் அறிவிக்கப்பட்டன.

9 திட்டங்கள்

அந்த வரிசையில் தற்போது புதிதாக பொறுப்பேற்று இருக்கும் த.வெ.க. அரசும், அதுபோல ஒரு பெயரை முன்னிலைப்படுத்தி அரசு திட்டங்களில் முத்திரைபதிக்கத் தொடங்கியிருக்கிறது. அதன்படி, கடந்த 5 மற்றும் 6-ந்தேதிகளில் சட்டசபையில் தாக்கல் செய்யப்பட்ட பொது மற்றும் வேளாண்மை பட்ஜெட்டுகளில் "வெற்றி" என்ற பெயரில் மட்டும் 9 திட்டங்களை அறிவித்து இருக்கின்றன.

வெற்றி

* வெற்றி மடிக்கணினி திட்டம்
* வெற்றி திறன் பயிற்சித் திட்டம்
* வெற்றி தொழில் முனைவோர் திட்டம்
* வெற்றி மகளிர் ஆடுகள் வளர்ப்பு திட்டம்
* வெற்றி வீடு திட்டம்
* வெற்றி 150
* வெற்றி விவசாயி விருது
* வெற்றி இல்லத்தரசி வீட்டுத்தோட்டம்
* வெற்றி வான்மகள் திட்டம்

இது பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டவை ஆகும். இனிவரும் நாட்களில் அரசு அறிவிக்கும் புதிய திட்டங்களிலும் இந்த பெயர் பிரதிபலிக்க அதிக வாய்ப்பு இருப்பதாகவே சொல்லப்படுகிறது.

# சசிகலா, தினகரனை கட்சியில் சேர்க்க வேண்டும்: வேலுமணி, விஸ்வநாதன் மீண்டும் போர்க்கொடி



சசிகலா, தினகரனை கட்சியில் சேர்க்கவேண்டும், அவர்களின் பேசி கட்சியை பலத்தப்படுத்த வேண்டும் என பழனிசாமிக்கு வேலுமணி, விஸ்வநாதன் ஆகியோர் இணைந்து கடிதம் எழுதி உள்ளனர்.

42 தொகுதிகளில் வெற்றி வாய்ப்பை இழந்தோம்

இதுதொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நடந்து முடிந்த 2026 தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் முடிவுகளுக்கு பிறகு, அதிமுக பொதுச்செயலாளராகிய நீங்கள், கட்சியை வழிநடத்திச் செல்வதில் எடுத்த தவறான முடிவுகளால், 47 சட்டமன்ற உறுப்பினர்களில், 25 சட்டமன்ற உறுப்பினர்கள், திமுகவுடன் இணைந்து ஆட்சி அமைப்பது தவறு என்பதை, சுட்டிக்காட்டினர்.

மேலும், 2021 சட்டமன்ற தேர்தலில் டிடிவி தினகரனுடன் கூட்டணி வைக்க மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா அவர்கள் சென்னையில் நேரில் சந்தித்து வலியுறுத்தியும், ஓ.பன்னீர் செல்வம் அவர்கள் ஒத்துக்கொண்ட நிலையில் நீங்கள் அதை உதாசினப்படுத்தியதால் 42 தொகுதிகளில் வெற்றி வாய்ப்பை இழந்தோம். அன்று டிடிவி தினகரன் அவர்களுக்கு சீட் கொடுக்க வேண்டாம், என்று நிராகரித்தீர்கள்.

2019ல் அஇஅதிமு.க தலைமையில் நாடாளுமன்ற தேர்தலை சந்தித்த போது, நம்மோடு கூட்டணியாக இணைந்து பயணித்த தேசிய முற்போக்கு திராவிட கழகம், புதிய தமிழகம் கட்சி மற்றும் தனி கட்சியாக இருந்த சரத்குமார் ஆகியோரை அரவணைக்காமல் 2021 சட்டமன்ற தேர்தலில் வெளியேற்றினீர்கள்.

நிர்வாகிகளுக்கு பல கோடி ரூபாய் இழப்பு

2024 நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.க டெல்லி தலைமை பலமுறை கூட்டணி வைக்க முயன்றும் கூட்டணியாக நம்முடைய அனைத்து கோரிக்கைகளையும் செய்வதாக கூறிய போதும் தன்னிச்சையாக முன்யோசனை இல்லாமல் செயல்பட்டதால் தி.மு.க - காங்கிரஸ் கூட்டணி 40 தொகுதிகளில் வெற்றி பெற வலிய வாய்ப்பை வழங்கினீர்கள். அது மட்டுமில்லாது உங்களுடைய இந்த தவறான முடிவால் பலகழக வேட்பாளர்கள் 3வது இடத்திற்கு தள்ளப்பட்டு கோடிக்கனக்கான ரூபாய் இழந்து நிற்கிறார்கள்.

அதுபோன்று பா.ம.க கூட்டணிக்கு வர சம்மதம் தெரிவித்த போதும், ஒரு மாத காலம் அதை உறுதி செய்யாமல் காலதாமதம் செய்த காரணத்தால் கூட்டணி வாய்ப்பை இழந்தோம், இப்படி தேடிவந்த பா.ஜ.க., பா.ம.க போன்ற கட்சிகளின் கூட்டணி வாய்ப்புகளை தன்னிச்சையாக நிராகரித்தீர்கள். அதுபோன்று பா.ம.க கூட்டணிக்கு வர சம்மதம் தெரிவித்த போதும், ஒரு மாத காலம் அதை உறுதி செய்யாமல் காலதாமதம் செய்த காரணத்தால் கூட்டணி வாய்ப்பை இழந்தோம், இப்படி தேடிவந்த பா.ஜ.க., பா.ம.க போன்ற கட்சிகளின் கூட்டணி வாய்ப்புகளை தன்னிச்சையாக நிராகரித்தீர்கள்.

அதேபோல் நடந்து முடிந்த 2026 சட்டமன்ற பொதுத் தேர்தலில் பலமுறை பிரம்மாண்ட கூட்டணி அமைப்பதாக தெரிவித்ததோடு, கூட்டணிக்கு நம்மை நாடி வந்த தே.மு.தி.க மற்றும் புதிய தமிழகம் கட்சிகளை நம்மோடு இணைத்துக் கொள்ளாமல் தன்னிச்சையாக வெளியேற்றிவிட்டீர்கள். குறிப்பாக தமிழக வெற்றிக் கழகத்துடன் கூட்டணி அமைக்கும் வாய்ப்புகளையும் பயன்படுத்திக் கொள்ளவில்லை.

சசிகலா, தினகரனை கட்சியில் சேர்க்கவேண்டும் அதனால், 2021, 2026 சட்டமன்ற பொது தேர்தல், 2024 நாடாளுமன்ற தேர்தல் ஆகிய 3 தேர்தல்களிலும் கழகம் வெற்றிபெற பிரகாசமான வாய்ப்புகள் இருந்தும், தாங்கள் எடுத்த தவறான தன்னிச்சையான முடிவுகளால், தொடர் தோல்விகளை சந்தித்து கழக நிர்வாகிகள், தொண்டர்கள் மத்தியில் மிகுந்த சோர்வை ஏற்படுத்தி உள்ளது. இதுவரை பொறுப்புகளில் இருந்து நீக்கப்பட்டவர்களை அதே பொறுப்புகளில் நியமிக்க வேண்டும்.

சசிகலா, டிடிவி தினகரனிடம் பேசி கட்சியில் சேர்த்து கட்சியை பலப்படுத்த வேண்டும். 6 மாதத்தில் வர உள்ள உள்ளாட்சி தேர்தலுக்கு முன் அதிமுகவை பலபடுத்தியே ஆக வேண்டும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "சிலர் 'ஜென் ஸி'ஐ தவறாக வழிநடத்த முயன்றனர்" ராஜினாமா குறித்து தர்மேந்திர பிரதான் கருத்து



புவனேஸ்வர்: நீட் போராட்டங்களின்போது 'GenZ' இளைஞர்களை சிலர் தவறாக வழிநடத்த முயன்றதாகவும், அதனாலேயே பிரதமரை சந்தித்துப் பதவி விலக தயாராக இருப்பதாக தெரிவித்தேன் என்றும் தர்மேந்திர பிரதான் விளக்கம் அளித்துள்ளார்.

டெல்லி ஜந்தர் மந்தரில் நடைபெற்ற போராட்டங்களுக்கு மத்தியில் மத்திய கல்வித்துறை அமைச்சர் பதவியை ராஜினாமா செய்து இரண்டு வாரங்கள் ஆகும் நிலையில், ஒடிஷா மாநிலம், சம்பல்பூரில் உள்ள கங்காதர் மெஹர் பல்கலைக்கழகத்தில் நேற்று (ஆக.08) நடைபெற்ற நிகழ்ச்சியில் முதன்முறையாக பங்கேற்றிருந்த பாஜகவின் மூத்த தலைவர் தர்மேந்திர பிரதான், மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் மத்தியில் உரையாற்றினார்.

அப்போது, தனது மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி ராஜினாமா குறித்து முதன்முறையாக மனம் திறந்து பேசினார்.

அதாவது,"நீட் போராட்டங்களின்போது நம்முடைய 'GenZ' இளைஞர்களை சிலர் தவறாக வழிநடத்த முயன்றனர். இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது 2 கோடி குழந்தைகள் பிறக்கின்றனர். அவர்களுக்கு பல லட்சியங்கள் உள்ளன. அவர்கள் உலகிற்கே வழிகாட்டியாக மாறுவார்கள். பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து பதவி விலகத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தேன். அதன்பின், ஜூலை 25ஆம் தேதி பதவியை ராஜினாமா செய்தேன்" என்று தெரிவித்தார். ரைராகோலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற தர்மேந்திர பிரதான், ஒடிஷாவின் முன்னாள் முதலமைச்சரும், பிஜு ஜனதா தளம் கட்சியின் தலைவருமான நவீன் பட்நாயக் மீது பல்வேறு விமர்சனங்களை முன்வைத்தார். "பிஜு ஜனதா தளம் கட்சியின் தொண்டர்களாலும், தன்னைத் திரும்பி செல்லுமாறு எழுப்பப்பட்ட முழக்கங்களாலும் தான் சற்றும் கலங்கவில்லை" என்று பிரதான் குறிப்பிட்டார்.

"நான் ஒடிஷா மக்களுக்கு அவப்பெயர் என்றும், ஒரு மோசமான நபர் என்றும்" நவீன் பாபு கூறுகிறார் என்ற தர்மேந்திரபிரதான்,"ஒடிஷா மக்களுக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வகையில் எப்போதாவது ஏதாவது செய்திருக்கிறேனா?" என்று கேள்வி எழுப்பினர்.

அதற்கு பாஜக தொண்டர்கள் "இல்லை, இல்லை..." என்று முழக்கமிட்டனர். மேலும், தனக்கு எதிரான போராட்டங்களில் இளைஞர்களை ஈடுபடுத்துவதாக பிஜு ஜனதா தளம் கட்சியின் தலைவரை குற்றம்சாட்டினார்.

"நான் மாநிலத்திற்கு பெருமை சேர்க்கும் சாதனைகளை செய்யாமல் இருக்கலாம். ஆனால் எனது செயல்பாடுகள் மாநிலத்திற்கு ஒருபோதும் அவப்பெயரை ஏற்படுத்தியதில்லை. மாநிலத்தின் நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் எந்தவொரு செயலையும் ஒருபோதும் நான் செய்யமாட்டேன்; ஜகந்நாதர் மற்றும் சம்பல்பூரின் காவல் தெய்வமான சமலேஸ்வரி ஆகியோரின் ஆசியுடன் 12 ஆண்டுகளுக்கு முன்பு தான் மத்திய அமைச்சரானேன்" என்று பிரதான் தெரிவித்தார். பிஜு ஜனதா தளம் எம்எல்ஏவும், சட்டப்பேரவையின் எதிர்க்கட்சி துணைத் தலைவருமான பிரசன்ன ஆச்சார்யா கலந்து கொண்ட நிகழ்ச்சி மேடையிலேயே பிஜு ஜனதா தளம் கட்சியின் தலைவருக்கு எதிரான கருத்துகளை பிரதான் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதானின் பேச்சுக்கு சம்பல்பூரின் பிஜு ஜனதா தளம் கட்சியின் மாவட்டத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ரோஹித் புஜாரி பதிலடி கொடுத்துள்ளார்.


செய்திகள் உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt



ஈரோடு மாநகராட்சி, மண்டலம் ஒன்று அதியமான் நகர் குடியிருப்பு பகுதியில் மக்கள் தொகை கணக்கெடுப்பாளரால் மேற்கொள்ளப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (9.8.2026) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

# பயன்பாட்டில் இல்லாத டயர்களை அப்புறப்படுத்தும் முகாம்
## ஈரோடு மாவட்ட கலெக்டர் கந்தசாமி தகவல்



தற்போது நிலவி வரும் பருவகால மாறுதலின் காரணமாக பொது மக்களுக்கு காய்ச்சல் உட்பட பல்வேறு தொற்றுநோய்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. எனவே இதனை தடுக்கும் பொருட்டு அரசு பல்வேறு நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

அதன் ஒரு பகுதியாக 06.08.2026 அன்று உள்ளாட்சித் துறையுடன் இணைந்து கொசு உற்பத்திக்கு முக்கிய காரணியாக உள்ள பயன்பாட்டில் இல்லாத டயர்களை அப்புறப்படுத்தும் முகாம் (Tyre Removal Campaign) நடத்தப்பட்டது.

அடுத்ததாக 08.08.2026 அன்று மாவட்டத்திலுள்ள அனைத்து பகுதிகளிலும் குடிநீரில் குளோரினேஷன் அளவு பரிசோதனை செய்யப்பட்டு பாதுகாப்பான குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. வருகின்ற திங்கட்கிழமை (10.08.2026) அனைத்து பள்ளி கல்லூரி வளாகங்களிலும் கொசுப்புழு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளது. அது தொடர்பாக 08.08.2026 அன்று காணொளி வாயிலாக அனைத்து பள்ளி தலைமையாசிரியர்களுக்கும் மாவட்ட சுகாதார அலுவலர் மற்றம் முதன்மை கல்வி அலுவலர் அவர்களால் ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

11.08.2026 செவ்வாய் கிழமை அன்று உள்ளாட்சித்துறைகள் மூலம் (Mass cleaning) ஆங்காங்கே தேங்கியுள்ள குப்பைகளை அகற்றவும் பயன்பாட்டில் இல்லாத நீர்த்தேக்க தொட்டிகளை அகற்றவும் கொசு உற்பத்தி மையங்களை அகற்றவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளது.

பருவமழை காலத்தில் மழைநீர் தேங்குவதால் கொசுக்கள் பெருகி, டெங்கு, சிக்குன்குனியா, மலேரியா உள்ளிட்ட கொசுக்களால் பரவும் நோய்கள் ஏற்படும் வாய்ப்பு அதிகரிக்கிறது. மேலும், குடிநீர் மாசுபாடு மற்றும் சுகாதாரமற்ற சுற்றுப்புறச் சூழல் காரணமாக வயிற்றுப்போக்கு உள்ளிட்ட தொற்றுநோய்களும் பரவும் அபாயம் உள்ளது. எனவே, பொதுமக்கள் பருவகால நோய்கள் குறித்து விழிப்புண ர்வுடன் இருந்து, முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை கடைப்பிடிக்க வேண்டும்.

வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். பயன்படுத்தப்படாத டயர்கள், தேங்காய் ஓடுகள், பிளாஸ்டிக்பொருட்கள். பூந்தொட்டிகள் உள்ளிட்டவற்றில் மழைநீர் தேங்குவதைத் தவிர்க்க வேண்டும். குடிநீரை பாதுகாப்பாக சேமித்து வைத்து, உணவு மற்றும் குடிநீர் தொடர்பான சுகாதார நடைமுறைகளை முறையாக பின்பற்ற வேண்டும்.

காய்ச்சல், தலைவலி, உடல்வலி, வாந்தி, வயிற்றுப்போக்கு உள்ளிட்ட உடல்நலக் குறைபாடுகள் ஏற்பட்டால் சுயமாக மருந்துகளை உட்கொள்ளாமல், அருகிலுள்ள அரசு அல்லது அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ நிலையத்தை அணுகி மருத்துவ ஆலோசனை பெற வேண்டும். எனவே, பொதுமக்கள் அனைவரும் விழிப்புணர்வுடன் செயல்பட்டு, நோய் பரவலைத் தடுக்கும் மாவட்ட நிர்வாகத்தின் நடவடிக்கைகளுக்கு முழுஒத்துழைப்புவழங்குமாறு ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர், S.கந்தசாமி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

# கோவையில் நடைபெற்ற இலவச கண் சிகிச்சை முகாம்



கோவை மாவட்ட பார்வையிழப்பு தடுப்புச் சங்கம், சிம்சன் நகர், சி. எஸ்.ஐ.டி.ஏ தூய ஆலயம், பெதஸ்தா மருத்துவமனை, அனைத்து சமூக மக்களுக்கும் உதவும் பேரவை மற்றும் கோவை அரவிந்த் கண் மருத்துவமனை சார்பாக நடைபெற்ற இலவச கண் சிகிச்சை முகாம்

கோவை சிவாஜி காலனி பகுதியில், செயின்ட் பீட்டர்ஸ் மழலையர் மற்றும் தொடக்கபள்ளி அமைந்துள்ளது. இங்கு கோவை மாவட்ட பார்வையிழப்பு தடுப்புச் சங்கம், சிம்சன் நகர், சி.எஸ்.ஐ.டி.ஏ தூய ஆலயம், பெதஸ்தா மருத்துவமனை, அனைத்து சமூக மக்களுக்கும்உதவும்பேரவை, மற்றும் கோவை அரவிந்த் கண் மருத்துவமனை, சார்பாக இலவச கண் பரிசோதனை முகாம் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கோவை கவுண்டம் பாளையம் காவல் நிலைய ஆய்வாளர் கந்தசாமி கலந்து கொண்டு இம்முகாமினை பார்வையிட்டு, அனைவருக்கும் வாழ்த்துக்கள் தெரிவித்தார். இந்த முகாமில், பொதுமக்களுக்கு கண்களில் புரைவிழுதல், நீர்அழுத்த நோய், மாலைக்கண் நோய், சீழ் நீர் வடிதல், தூரப்பார்வை, கிட்ட பார்வை, ஆகியவற்றிற்கான பரிசோதனைகள் இலவசமாக வழங்கப்பட்டது. மேலும் பொது மக்களுக்கு இவற்றில் ஏதேனும் குறைகள் கண்டுபிடிக்கப்பட்டால், அவர்களுக்கு இலவச அறுவை சிகிச்சையும் செய்யப்பட்டது இந்த நிகழ்ச்சியில்

பெதஸ்தா மருத்துவமனையின் தலைமை மருத்துவர், ஐசக் கிறிஸ்டியன் மோசஸ், செயின்ட் பீட்டர்ஸ் மழலையர், மற்றும் தொடக்கபள்ளியின் தாளாளர் தாய் ரோமலோ வான்மதி, தூய மீட்பர் ஆலயத்தின் பொருளாளர் மோகன் குமார்,

பெதஸ்தா மருத்துவமனை மேளாளர் ஆலிவர் ப்ரி மேன்,

சிவாஜி காலனி குடியிருப்போர் நலசங்கதலைவர் லயன் டாக்டர் நடராஜன், ஜெபா, வர்ஷா, வர்ஷினி மோகன் ராஜா, கவுண்டம் பாளையம் அமுல்ராஜ், பத்மாவதி, பால்ராஜ், வழக்கறிஞர் குமாஸ்தா செல்வராஜ், கவுன்சிலர் மாலதி, மற்றம் சிஎஸ்ஐ தேவாலய ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்த க்கது.

# வேப்பூர் அருகே அம்பேத்கருக்கு மரியாதை செய்த புதிய விசிக நிர்வாகிகள்



கடலூர் மாவட்டம் வேப்பூர் அடுத்த சேப்பாக்கம் கிராமத்தில் உள்ள அரசியல் சாசன சிற்பி டாக்டர் அம்பேத்கரின் முழுவுருவச் சிலைக்கு கட்சியின் புதிய பொறுப்பாளர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் வெளியிட்ட மறுசீரமைக்கப்பட்ட புதிய நிர்வாகிகள் நியமனப் பட்டியலை அண்மையில் வெளியிட்டார், விருத்தாச்சலம் தொகுதி மாவட்டச் செயலாளர் வீர.திராவிடமணி அவர்களின் பரிந்துரையின்பேரில் பொறுப்பேற்றுக் கொண்ட மாவட்ட மற்றும்ஒன்றியநிர்வாகிகள் நல்லூர் வடக்கு ஒன்றிய செயலாளர் கெங்கா. முத்து வளவன் தலைமையில் அண்ணலின் திருவுருவச்சலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அப்போது நல்லூர் மேற்கு ஒன்றிய மகளிர் விடுதலை இயக்கத்தின் ஒன்றிய செயலாளர் ராஜலட்சுமி ஜெயவேல், விசிக மூத்த நிர்வாகிகள் செந்தில்குமார், தன்ராஜ், பாலமுருகன், இளையான் மற்றும் புதிய பொறுப்பாளர்கள் சர்மா, கருப்புசாமி, தேவகிருஷ்ணன், திருமால், அசோக், வைரவேல் உள்ளிட்ட பல்வேறு பொறுப்பாளர்கள் உடன் இருந்தனர்.

# ஈரோடு மாவட்டம் பவானியில் பிளஸ் 2, 10ஆம் வகுப்பு தேர்வில் சாதனை படைத்த மாணவர்களுக்கு பரிசளிப்பு




ஈரோடு மாவட்டம் பவானி தகடப்பாடி பகுதியில் உள்ள திருமண மண்டபத்தில், 24 மனை தெலுங்கு செட்டியார்கள் சமுதாயத்தைச் சேர்ந்த 10 மற்றும் 12-ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்ற 50-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியருக்கு பாராட்டு விழா நடைபெற்றது.

பவானி விஜயலட்சுமி கல்வி அறக்கட்டளை மற்றும் விஜயலட்சுமி அன்னதானதிட்டம்சார்பில் நடைபெற்ற இவ்விழாவிற்கு, விஜயலட்சுமி கல்வி அறக்கட்டளை சேர்மன் கீதா செந்தில் முருகன் தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினராகபவானி 24மனை தெலுங்கு செட்டியார்கள் சங்கத்தலைவர் எஸ். வி.எல். கோபால் கலந்து கொண்டு, பொதுத்தேர்வில் சிறப்பிடம் பெற்ற மாணவ, மாணவியருக்கு சிறப்புபரிசுகள், பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை வழங்கி கௌரவித்தார்.

இவ்விழாவில் கல்வி அறக்கட்டளை டிரஸ்டி செந்தில் முருகன், யசோதா உள்ளிட்ட நிர்வாகிகள், மாணவ, மாணவியர்கள் மற்றும் பெற்றோர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

மாணவர்களின் உயர்கல்வி மற்றும் கல்வி முன்னேற்றத்தை ஊக்குவிக்கும் வகையில் அமைந்த இந்நிகழ்ச்சி, பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது.

# தூத்துக்குடி மாப்பிள்ளையூரணி காந்தி நகரில் உள்ள கோவிலில் 9வது ஆண்டு கொடை விழா மாபெரும் அன்னதானம் பக்தர்கள் திரளாக பங்கேற்பு



தூத்துக்குடி மாப்பிள்ளையூரணி பஞ்சாயத்து காந்தி நகரில் அருள்பாலித்து வரும் அருள்மிகு ஸ்ரீ விக்னேஸ்வராய விநாயகர், அருள்மிகு ஸ்ரீ பெரிய பாளையத்து மகாளி அம்மன், அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளியம்மன், அருள்மிகு ஸ்ரீ கோட்டை மாரியம்மன், ஸ்ரீ பாண்டி முனீஸ்வரர் திருக்கோவில் மற்றும் பரிவார தெய்வங்களின் 9-வது ஆண்டு கொடை விழா சிறப்பாக நடைபெற்றது.

கடந்த ஆகஸ்ட் 1-ம் தேதி கால்நாட்டு விழாவுடன் தொடங்கிய கொடை விழாவில், ஆகஸ்ட் 6-ம் தேதி வருஷாபிஷேகம், மகா அபிஷேகம் மற்றும் சிறப்பு அலங்கார தீபாராதனை நடைபெற்றது.

ஆகஸ்ட் 7-ம் தேதி தீர்த்தக்கரைக்கு சென்று அம்மன் நகர்வலம் வருதல், கும்பம் ஏற்றுதல் மற்றும் திருவிளக்கு பூஜை உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

ஆகஸ்ட் 8-ம் தேதி சிறப்புஅபிஷேகம், சிறப்பு பூஜைகள், அம்மன் நகர்வலம், மாவிளக்கு மற்றும் முளைப்பாரி ஊர்வலம் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து இன்று காலை 7 மணிக்கு பால்குடம் எடுத்து ஊர்வலம், காலை 9 மணிக்கு அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், மதியம் 12 மணிக்கு மதியக்கொடை விழா, மதியம் 12.30 மணிக்கு கூழ் ஊற்றுதல் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மேலும், மதியம் 1 மணிக்கு ஆலய நிர்வாகம் சார்பில் மாபெரும் அன்னதானம் நடைபெற்றது. கொடை விழாவையொட்டி நடைபெற்ற சிறப்பு பூஜைகள் மற்றும் வழிபாடுகளில் தூத்துக்குடி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளைச் சேர்ந்த பக்தர்கள், பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு அம்மன் அருளைப் பெற்றுச் சென்றனர்.

நிகழ்ச்சி விழா ஏற்பாடுகளை கோவில் நிர்வாகக் குழுவினர் I.ஞானராஜ், G.சந்திரமுத்து, P. பன்னீர்செல்வம், P.கனி, J.செந்தில்குமார், S.செல்வவேல்மணி (ரோஹிணி FAC) மற்றும் குடும்பத்தினர் தலைமை தாங்கி சிறப்பாக நடத்தினர். சிறப்பு உபயதாரர்கள் விழாவையொட்டி P.குமாரசாமி, K.முத்து லெட்சுமி, A.அம்மா ன்கனி, A.சாந்தி (உப்பு வியாபாரம்), M. பவுன்ராஜ், P.உமா மகேஸ்வரி, N.பாலசுமர், P.வேணி (ஸ்ரீ தன்விகா எலக்ட்ரிகல்ஸ்), A. சுரேஷ்குமார், S.சித்த ஸ்வரி, A.இசக்கிரமேஷ், E.சரவணசெல்வி ஆகியோர் சிறப்பு உபயங்களை வழங்கினர்.

அன்னதான உபயதாரர்கள் V.அருண்ராஜ், A.தங்ககாமாட்சி (ஸ்ரீநிகா ஷாப்பிங் சென்டர், சென்னை) மற்றும் K. செல்வகுமார், P. சத்யா ஆகியோர் அன்னதான உபயத்தை வழங்கினர்.

சிறப்பு நன்கொடையாளர்கள் S.சுபேஷ்வரன், S.பிரேமா (VL Enterprises), சென்னை;

S.பேச்சிமுத்து @ செல்வம், P.பானுமதி (S.S.Construction), சென்னை; V. ஜெயராம், J.மாஞ்செல்வி (Ekart Delivery Partner), சென்னை ஆகியோர் சிறப்பு நன்கொடைகளை வழங்கினர். கொடை விழாவை முன்னிட்டு நடைபெற்ற அனைத்து நிகழ்ச்சி களிலும் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடு களை செய்திருந்த கோவில் நிர்வாகத்தினருக்கு பக்தர்கள் பாராட்டு தெரிவித்தனர்.

# கோவையில் போதையில்லா கோவை எனும் தலைப்பில் நடைபெற்ற மாரத்தான்



போதையில்லா கோவையை, உருவாக்க வேண்டும் என்று, 5,000-க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற ரன் ஃபார் நேஷன் 2026 விழிப்புணர்வு மாரத்தான் போட்டி தமிழக பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சம்பத்குமார் கொடியசைத்து துவக்கி வைத்தார்.. போதையில்லா கோவை என்ற சமூக நோக்கத்தை வலியுறுத்தும் வகையில், கோவை சிங்காநல்லூர் பகுதியில் உள்ள விஜிஎம் காஸ்ட்ரோ, ஆர்த்தோ மற்றும் பல்துறை சிறப்பு மருத்துவமனை மற்றும் கோவை தடகளக் கழகம் இணைந்து நடத்திய ரன் பார் நேஷன் 2026 எனும், விழிப்புணர்வு மாரத்தான், கோவை நேரு விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

விஜிஎம் மருத்துவமனை மற்றும் கோவை தடகளக் கழகம் தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக இணைந்து இந்த மாரத்தானை நடத்தியது. கரூர் வைஸ்யா வங்கி முக்கிய ஆதரவாளராக இணைந்திருந்தது. இந்த ஆண்டு மாரத்தானில் 4,750 ஓட்டப்பந்தய வீரர்கள் பங்கேற்றதுடன், நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள், விளையாட்டுக் கழகங்கள், தன்னார்வலர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்டோர் இணைந்து மொத்தம் 5,000-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

போதை பொருட்களை ஒழிக்க வேண்டும், உங்களது முழங்கால்களை பாதுகாக்க வேண்டும்' என்ற இரட்டை நோக்கங்களுடன் நடைபெற்ற இந்த மாரத்தான், போட்டியில் போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வையும், முழங்கால் ஆரோக்கியம் குறித்த விழிப்புணர்வையும் பொதுமக்களிடம் ஏற்படுத்தும் வகையில் அமைந்தது.

இதில், மாநகராட்சி ஆணையர் கட்டா ரவி தேஜா தலைமையில் 7,000-க்கும் மேற்பட்டோர் போதைப்பொருள் ஒழிப்பு உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர். பிற்படுத்தப்பட்டோர் நலத்துறைஅமைச்சர் வி. சம்பத்குமார் கொடியசைத்து இந்த மாரத்தானை தொடங்கி வைத்தார்.

பல்வேறு வயது மற்றும் பிரிவு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு ரூ.2 லட்சத்திற்கும் அதிகமான ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும், மாநகராட்சிப் பள்ளி மாணவர்களுக்கு இலவசப் பதிவு, விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சமூக நலத் திட்டங்களுக்காக மாரத்தான் மூலம் திரட்டப்பட்ட நிதி பயன்படுத்தப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

விஜிஎம் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் வி.ஜி. மோகன் பிரசாத், மருத்துவஇயக்குநர் டாக்டர் சுமன், கோவை தடகளக் கழக செயலாளர், சீனிவாசன் உள்ளிட்டோர் நிகழ்வில் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### கோவை அரசூர் பகுதியில் உள்ள

## கேபிஆர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கு ’26’ எனும் தலைப்பில் நடைபெற்றது




கோவை அரசூர் பகுதியில் உள்ள கேபிஆர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்

தகவல் தொழில்நுட்பக்கருத்தரங்கு 26 எனும் தலைப்பில் நடைபெற்றது, இதில் மாணவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

கோவை அரசூர் பகுதியில் உள்ள கே.பி.ஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஒருங்கிணைந்த வணிகவியல் பள்ளி சார்பாக, ஐடி கான்கிளேவ் '26' என்ம் தகவல் தொழில்நுட்பக் கருத்தரங்கு நடைபெற்றது. வணிகள் 5.0 எனும் தலைப்பில் வணிகத்தின் எதிர்காலத்தை வடிவமைக்கும் ஏஐ, பின் டெக், மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள்" என்ற கருப்பொருளில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாணவர்கள், பேராசிரியர்கள் மற்றும் தொழில்துறை வல்லுநர்கள் பங்கேற்றனர். கல்லூரியின் முதல்வர் டாக்டர் பி. கீதா தலைமையுரையாற்றி,வணிகவியல் கல்வியுடன் செயற்கை நுண்ணறிவு, நிதித் தொழில்நுட்பம் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை ஒருங்கிணைப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார்.தகவல்தொழில்நுட்பம் மற்றும் ஒருங்கிணைந்த வணிகவியல் பள்ளியின் புலமுதன்மையர் டாக்டர் கே. ஜோதி, கருத்தரங்கின் நோக்கத்தையும், கல்வி-தொழில்துறை இணைப்பின் முக்கியத்துவத்தையும் விளக்கினார். நிகழ்வில் பல்வேறு மாணவர் சங்க நிர்வாகிகளின் அறிமுகம் மற்றும் பதவியேற்பு விழாவும் நடைபெற்றது.

பி.எஸ்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் மேலாண்மை அறிவியல் துறைத் தலைவர் டாக்டர் மதிபூரணி வி. பி. நெறிப்படுத்திய குழு கலந்துரையாடலில், யுஎஸ்டி குளோபல் நிறுவனத்தின் சார்பாக டாக்டர் வித்யா சரத், காக்னிஸன்ட் நிறுவனத்தின் சார்பாக செல்வி தரணி ஈஸ்வரன், உள்ளிட்ட பலர் பங்கேற்று, செயற்கை நுண்ணறிவு, பின்டெக், சைபர் பாதுகாப்பு,டிஜிட்டல் மாற்றம், தொழில்முனைவு மற்றும் எதிர்கால வேலைவாய்ப்புகள் குறித்து பயனுள்ள கருத்துகளைப் பகிர்ந்தனர்.

மாணவர்கள் வல்லுநர்களுடன் நேரடியாக கலந்துரையாடி, தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்புத் திறன்கள் தொடர்பான பல்வேறு கேள்விகளுக்கு விளக்கங்களைப் பெற்றனர். பின்னர் நடைபெற்ற மாணவர் கலந்துரையாடல் அமர்வும் மாணவர்களின் சிந்தனைத் திறனை வெளிப்படுத்தும் வகையில் அமைந்தது. ஐடி கான்கிளேவ் 26 தொழில்துறைக்கும் கல்வித்துறைக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்தியதுடன், வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் குறித்த மாணவர்களின் அறிவை மேம்படுத்தி, எதிர்கால வணிக உலகிற்குத் தயார்படுத்தும் சிறப்பான கல்வி முயற்சியாக அமைந்தது.



## விசிக புதிய பொறுப்பாளர்கள் மாவட்ட செயலாளருடன் சந்திப்பு

வேப்பூர்:விருத்தாசலம் சட்டமன்றதொகுதியைச் சேர்ந்த விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் புதிய பொறுப்பாளர்கள் பட்டியலை, கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் அண்மையில் வெளியிட்டார். இதன்படி புதிய பொறுப்பாளர்களை பரிந்துரைசெய்தகடலூர் மேற்கு மாவட்ட செயலாளர் வீர. திராவிடமணியை, புதிய பொறுப்பாளர்கள் மரியாதை நிமித்தமாக நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

அதன்படி, நல்லூர் கிழக்கு ஒன்றிய இளஞ்சிறுத்தை எழுச்சிப் பாசறை ஒன்றிய செயலாளராக நியமிக்கப்பட்ட திருப்பெயர் எஸ்.சேவாக்,நல்லூர் கிழக்கு ஒன்றிய மகளிர் அணி செயலாளர் செ. லலிதா, முற்போக்கு மாணவர் கழக ஒன்றிய செயலாளர் வரம்பனூர் வெங்கடேசன் மற்றும் துணைச் செயலாளர் கொத்தனூர் விடுதலைச்செல்வன் ஆகியோர் மாவட்ட செயலாளர் வீர. திராவிடமணியை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

இந்நிகழ்வில் முகாம் நிர்வாகிகள் திருப்பெயர் பிரேம்குமார், சூர்யாதரன்,பரத்,அன்புமணி, செல்வா, கலியன், அரவித், வெங்கடேசன், வீரமணி உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



திருவள்ளூர் மாவட்டம் , கடம்பத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் போதை ஒழிப்பு பேரணி நடத்தி போதையில்லா தமிழ்நாடு போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பேரணி நடைப்பெற்றது, பேரணி கடம்பத்தூர் பஜார் வழியாக பெரிய தெரு , உள்ளிட்ட ஊராட்சிக்குட்பட்ட மக்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் பேரணியாகபோதைஒழிப்புவாசகங்கள்அடங்கியபதாகைகளைகையில்ஏந்திபோதைஒழிப்புவிழிப்புணர்வுவாசங்களை கோசகங்கள் எழுப்பிய படி மாணவ மாணவிகள் பேரணியாக சென்றனர் தலைமை ஆசிரியை குமாரிக்குட்டி தலைமை தாங்கினார் திரு. நெப்போலியன் ( போதை ஒழிப்பு மன்ற ஒருங்கிணைப்பாளர்) முன்னிலை வகித்தார் , தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் பேரணியை முடித்துவைத்தார் ஆசிரியர்கள்பழனி.நித்தியா, காயத்திரி, காமேஷ். உள்ளிட்ட ஆசிரியர்கள் மாணவ மாணவிகள் கலந்துக்கொண்டனர்

## சங்கரன்கோவிலில் நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்கக்கோரி கண்டன ஆர்ப்பாட்டம்

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் பிரதான தொழிலான மாற்று ஏற்பாடும் இல்லாமல் உடனடியாக சாயப்பட்டறைகள் சீல் பெற்றதால் விசைத்தறி தொழிலாளர்கள் தங்களது போராட்டத்தை தற்-



விசைத்தறி தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க கோரி நெசவாளர்கள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் மாவட்டத்தில் வளர்ந்து வரும் நகரங்களில் முக்கியமான நகரமாகும். சங்கரன்கோவில் பகுதியை பொறுத்தவரை விசைத்தறி தொழில் மிகவும் முக்கியமானதாகும். விசைத்தறி தொழிலை நம்பி நேரடியாகவும், மறைமுகமாகவும் சுமார் 25,000 தொழிலாளர்கள் பணி செய்து வருகின்றார்கள். இந்நிலையில்சங்கரன்கோவிலில் செயல்பட்டு வந்த சாயப்பட்டறைகளை ஆய்வு செய்த அமைச்சர் ராஜீவ் விதிமுறைகளை மீறி சாயப்பட்டறைகள் செயல்பட்டு வந்ததாக அதை சீல் வைக்க உத்தரவிட்டார். எந்தவித மாற்று ஏற்பாடும் இல்லாமல் உடனடியாக சாயப்பட்டறைகள் சீல் வைக்கப்பட்டது. தொடர்ந்து அந்த ஆலைகளுக்கான மின் இணைப்பும் துண்டிக்கப்பட்டது. சங்கரன்கோவிலில் பிரதான தொழிலாளர் விசைத்தறி தொழிலாளர்களை பாதிக்கும் வகையில் செயல்பட்ட அரசை கண்டித்து விசைத்தறி தொழிலாளர்கள் மற்றும் உரிமையாளர்கள் சாலை மறியல், கண்டன ஆர்ப்பாட்டம், கஞ்சி தொட்டி திறக்கும் ஆர்ப்பாட்டம் என பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் மூலம் தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தி வந்தனர். மேலும் சாயப்பட்டறைகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தொடர்ந்து வலியுறுத்தி வந்தனர். இந்நிலையில் கடந்த மாதம் சங்கரன்கோவிலில் பிரசித்தி பெற்ற ஆடித்தபசு திருவிழா 12 நாட்கள் நடைபெற்றதால் விசைத்தறி தொழிலாளர்கள் தங்களது போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைத்தனர். இந்நிலையில் சங்கரன்கோவில் நெசவாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க கோரி நெசவாளர்கள் சார்பில் நேற்று முன்தினம் இரவு சங்கரன்கோவில் - திருவேங்கடம் சாலையில் பாடா பிள்ளையார் கோவில் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு செங்குந்தர் அபிவிருத்தி சங்க செயலாளர் மாரிமுத்து தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் திமுக முன்னாள் அமைச்சர் தங்கவேலு, சங்கரன்கோவில் நகர் மன்ற அதிமுக துணை தலைவர் கண்ணன், பாஜக மாவட்ட தலைவர் ஆனந்தன் அய்யாச்சாமி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட குழு உறுப்பினர்அசோக்ராஜ், இந்து முன்னணி கோட்டச் செயலாளர் ஆறுமுகச்சாமி, அம்மா மக்கள் முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளர் முருகையா பாண்டியன், நாம் தமிழர் கட்சி கார்த்திக் உள்ளிட்ட பலர் கண்டன உரையாற்றினார்கள். அப்போது கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் விசைத்தறி தொழிலாளர்சங்கமாவட்டபொருளாளர் மாணிக்கம்,

அதிமுகஒன்றியசெயலாளர்கள் ரவிச்சந்திரன், செல்வராஜ், செல்வம்,பாஜக நகர தலைவர் உதயகுமார்,இந்து முன்னணி மாவட்டச் செயலாளர் ஆறுமுகம், விஸ்வ ஹிந்து பரிஷத் மாவட்ட செயலாளர் வன்னியராஜ், விசைத்தறி உரிமையாளர்கள், தொழிலாளர்கள், செங்குந்தர் அபிவிருத்தி சங்கம் செங்குந்தர் முன்னேற்ற சங்கம் மற்றும் பெண்கள், அனைத்து கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

## ஈரோட்டில் இலட்சிய ஜனநாயக கட்சியின் மாவட்ட வளர்ச்சி மற்றும் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது

ஈரோடு கிழக்கு மாவட்ட இலட்சிய ஜனநாயக கட்சி சார்பில், ஈரோடு கிழக்கு மற்றும் மொடக்குறிச்சி தொகுதிகள் அடங்கிய மாவட்ட வளர்ச்சி மற்றும் ஆலோசனை கூட்டம் ஈரோடு பஸ் நிலையம் அருகில் உள்ள மல்லிகை அரங்கத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு ஈரோடு கிழக்கு மாவட்டச் செயலாளர் அருள்குமார் தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில் இலட்சிய ஜனநாயக கட்சியின் மாநில துணைப் பொதுச்செயலாளர் லிங்கராஜ், மாநில முதன்மை அமைப்பாளர் கார்த்திகேயன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டு, கட்சியின் வளர்ச்சிப் பணிகள், உட்கட்சி அமைப்புகளை வலுப்படுத்துதல் மற்றும் வருங்கால செயல்பாடுகள் குறித்து நிர்வாகிகளுக்கு ஆலோசனைகளையும், வழிகாட்டுதல்களையும் வழங்கினர்.



இந்நிகழ்ச்சியில் ஈரோடுமேற்குமற்றும் பவானி மாவட்ட செயலாளர் வெற்றிநிதி சின்னையன் மற்றும் துணைச் செயலாளர் பிரகாஷ் மற்றும் மாவட்ட, ஒன்றிய,நகர மற்றும் பகுதி நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.







# கௌரவ டாக்டர் பட்டம் பெற்று கோவை திரும்பிய கராத்தே மாஸ்டர்



கோவை குனியமுத்தூர் பகுதியில், கடந்த 25 ஆண்டுகளாக கராத்தே விஜூ மார்சுயல் ஆர்ட்ஸ் அகாடமி எனும் பயிற்சி மையத்தை, டாக்டர் எம் விஜூ நடத்தி வருகின்றார். இவர் மாணவ மாணவியர்களுக்கு கராத்தே, சிலம்பம், குத்துச்சண்டை, வெயிட் லாஸ், போன்ற பயிற்சிகளை அளித்து வருகின்றார். இதுவரை சுமார், 1500க்கும் மேற்பட்ட மாணவர்கள் சிலம்பம், கராத்தே,குத்துச்சண்டை உள்ளிட்ட பயிற்சிகளை பெற்றுள்ளனர். இவரது சேவையை பாராட்டும் வகையில், சென்னை மயிலாப்பூரில் உள்ள கற்பகம் இன்டர்நேஷனல் உணவக அரங்கில், சர்வதேச தமிழ் பண்பாட்டு பல்கலைக்கழகம் சார்பாக, நடைபெற்ற நிகழ்ச்சியில் கௌரவ முனைவர்பட்டம்வழங்கி இவரை,பெருமைபடுத்தி உள்ளது.இதனைபெற்று கொண்ட விஜூ, இன்று ரயில் மார்க்கமாக கோவை வந்தடைந்தார். கோவை ரயில் நிலையத்தில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய விஜூ கூறியதாவது.. தனக்கு, 2வது முறையாக சிலம்பத்தில் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டுள்ளது

இதனை,கலைமாமணி திரைப்பட நடிகை அம்பிகா வழங்கினார். இது தனக்கு கூடுதல் பெருமையாக உள்ளது என்றார். மேலும் தான் 6வது டன் ப்ளாக் பெல்ட் சர்வதேச பயிற்சியாளராக உள்ளதாகவும், மலேசிய

சிலம்ப ஆசான் கருப்பு பெல்ட் நேஷனல் ரெப்ரியாக உலக சிலம்ப விளையாட்டு சங்கத்தில் உள்ளதாகவும் கூறினார். மேலும் தனது மாணவியர்கள், சிலம்பத்தில் மூன்றரை மணி நேரம் தொடர்ந்து சிலம்பம் சுற்றி டிவைன் புக் ஆப் ரிக்கார்ட் படைத்துள்ளனர்,

சிலம்பம், கராத்தே, பாக்சிங் போன்ற கலைகளை மாணவ மாணவியர்கள் கற்று கொள்ள வேண்டும் என்று குறைந்த கட்டணத்தில் அதனை வழங்கி வருகின்றேன் என தெரிவித்தார். கூடுதலாக அரசு பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு இலவசமாக பயிற்சி அளித்துள்ளதுடன், ஏழை எளிய பெற்றோர்களின் குழந்தைகளுக்கு இலவச பயிற்சிகள் வழங்கி, அவர்களை, மாவட்ட, மாநில, சர்வதேச, அளவிலான போட்டிகளில் பங்கேற்க வைத்துள்ளதாகவும் கூறினார்

இதனை பாராட்டி ஆந்திர மாநிலம் கர்நாடகா முன்னாள் ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன், பாராட்டி சான்றிதழ் வழங்கியுள்ளதாகவும், கடந்த முறை தமிழ்நாடு கவர்னராக இருந்த ஆர் என்.ரவி அவர்களிடமும் சிறந்த கராத்தே மற்றும் சிலம்ப மாஸ்டர் என்ற விருதையும் பெற்றுள்ளதாக கூறினார் மேலும் தன்னிடம் பயிற்சி பெறும் மாணவர்கள் 35 பேர் சென்னையில் நடைபெற்ற கின்னஸ் சாதனை நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கின்னஸ் சாதனை செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.



ஈரோடு மாநகராட்சி, 11,18வது வார்டு மாணிக்கம் பாளையம் வீட்டுவசதி வாரியத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ கருப்பண்ணசாமி, ஸ்ரீ கன்னிமார் சுவாமி, ஸ்ரீ அங்காளம்மன், ஸ்ரீ நாகம்மன் சுவாமிகள் திருக்கோயில் தீர்த்த திருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற்றது.இந்த திருவிழா நிகழ்வினை ஈரோடு மாநகராட்சி 2 ஆம் மண்டல தலைவர் காட்டு சுப்பு (எ) M.P.சுப்ரமணியம் தலைமையில் இளைய கோபால், கோயில் நிர்வாகிகள் அப்பாசாமி, K.அருண்பிரசாத், R.கோகிலா, கிளாசிக் இளைஞர் நற்பணி மன்றம் மற்றும் ஊர் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர். ஈரோடு டிஎஸ்பி முத்துக்குமார் மற்றும் காவல் ஆய்வா ளர் சரவணன் ஆகியோர் கலந்து கொண்டு ஈரோடு மாணிக்கம்பாளையம் கருப்பண்ணசாமி கோயில் வருடாந்திர திருவிழாவை முன்னிட்டு நடைபெற்ற பரதநாட்டிய நடன நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மாணவர்களுக்குப் பரிசுகளை வழங்கினர்.இந்த தீர்த்த திருவிழாவின் சிறப்பு நிகழ்வாக இன்று (09.08.2026)மாபெரும் அசைவ அன்னதானம் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பக்தர்கள் , பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.



ஈரோடு மாவட்டம், கவுந்தப்பாடி அருகே உள்ள ஆப்பக்கூடலில் முன்னாள் அமைச்சர் என்.கே.கே. பெரியசாமியின் 89வது பிறந்தநாளையொட்டி , அவரது இல்லத்தில் ஈரோடு மாநகர விவசாய அணி துணை அமைப்பாளர் வ. ராசு மற்றும் திமுக நிர்வாகிகள் நேரில் சந்தித்து பிறந்தநாள் வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.மேலும் இந்த நிகழ்வில் கட்சி நிர்வாகிகள் மற்றும் ஆதரவாளர்கள் கலந்து கொண்டு முன்னாள் அமைச்சருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

# சென்னை ஐகோர்ட்டிற்கு நியமிக்கப்பட்ட 15 நீதிபதிகள் பதவியேற்பு



சென்னை ஐகோர்ட்டில் மொத்தம் 75 நீதிபதி பணியிடங்கள் உள்ளன. இதில் 51 நீதிபதிகள் உள்ளனர். 24 காலிப்பணியிடங்கள் உள்ளன. இந்த இடங்களுக்கு மாவட்ட நீதிபதிகள், வழக்கறிஞர்கள் என 19 பேருடைய பெயரை சென்னை ஐகோர்ட்டு மூத்த நீதிபதிகள் கொண்ட கொலீஜியம் பரிந்துரை செய்தது.

இந்த பரிந்துரையை சுப்ரீம் கோர்ட்டு மூத்த நீதிபதிகள் கொண்ட கொலீஜியம் ஏற்றுக் கொண்டது. அந்த பரிந்துரையை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தது.

15 நீதிபதிகள் பதவியேற்பு

இந்த பரிந்துரை பரிசீலித்த மத்திய அரசு, 15 பேரை ஐகோர்ட்டு நீதிபதிகளாக நியமிக்க பரிந்துரைத்தது.இந்தபரிந்துரையை ஏற்றுக்கொண்டு ஜனாதிபதி சென்னை ஐகோர்ட்டிற்கு 15 நீதிபதிகளை நியமித்து உத்தரவு பிறப்பித்தார்.

இந்நிலையில், சென்னை ஐகோர்ட்டு நீதிபதிகளாக நியமிக்கப்பட்ட 15பேரும் இன்று பதவியேற்றுக்கொண்டனர்.

இதில், 5 நீதிபதிகள் சென்னை ஐகோர்ட்டின் நிரந்தர நீதிபதிகளாகவும்,10பேர் கூடுதல் நீதிபதிகளாகவும் பதவியேற்றுக்கொண்டனர். தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

சென்னை ஐகோர்ட்டு நீதிபதிகளாக பதவியேற்றுக்கொண்டர்கள் பெயர் விவரம்:-

கோவிந்தராஜன் கிருஷ்ணசாமி
ரஜ்னிஷ் பதியில்
ரமேஷ் நடராஜன்
ஜிகே முத்துக்குமார்
ராமகிருஷ்ணா
ராஜேஷ்விவேகானந்தன்
ரவீகுமார் சங்கரநாராயணன்
திலீப் குமார் நடராஜன்
எல்லப்பன் மனோகரன்
முருகன்( நீதித்துறை அதிகாரி)
சுமதி
அல்லி
திருமகள்

சண்முகன் கார்கிகேயன்
முருகேசன் பாலுசாமி
குணசேகரன்

# மூன்றாம் கட்ட எஸ்ஐஆர் பணி இதுவரை 1.5 கோடி வாக்காளர் பெயர்கள் நீக்கம்



புதுடெல்லி: தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ள மூன்றாம் கட்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த (எஸ்ஐஆர்) பணியில் இதுவரை சுமார் 1.5 கோடி வாக்காளர்கள், வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

டெல்லி,ஒடிசா,மிசோரம், சிக்கிம், மணிப்பூர், உத்தராகண்ட், ஆந்திரா, அருணாச்சல் பிரதேசம், ஹரியானா, சண்டிகர், தெலங்கானா, பஞ்சாப், கர்நாடகா, மேகாலயா, மகாராஷ்டிரா, ஜார்கண்ட், நாகலாந்து, திரிபுரா, தாத்ரா மற்றும் நகர் ஹவேலி, டையூ மற்றும் டாமன் என மொத்தம் 16 மாநிலங்கள், 3 யூனியன் பிரதேசங்களில் மூன்றாம் கட்ட எஸ்ஐஆர் பணி நடைபெறுகிறது.

இந்த பணியின் கீழ் இதுவரை 12 மாநிலங்களுக்காக வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. மற்ற இடங்களில் எஸ்ஐஆர் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

வரைவு வாக்காளர் பட்டியல் வெளியாகி உள்ள 12 மாநிலங்களில் மொத்தம் 13,77,27,807 கோடி வாக்காளர்கள் இருந்துள்ளனர். அவர்களில் வசிப்பிடத்தில் இல்லாதவர்கள், இடம்பெயர்ந்து சென்றவர்கள், உயிரிழந்தவர்கள் என சுமார் 1,58,59,834 கோடி வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைய தரவுகள் மூலம் தெரியவந்துள்ளது. இதன் மொத்தம் சதவீதம் சுமார் 11.51%.

அதிகபட்சமாக தாத்ரா மற்றும் நகர் ஹவேலி, டையூ மற்றும் டாமன் பகுதியில் சுமார் 29.64 சதவீத வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். அருணாச்சல 19.09%, ஹரியானா 16.38%, சத்தீஸ்கர் 12.8%, மிசோரம் 5.2%, மணிப்பூர் 7.5%, உத்தராகண்ட் 10.39%, சண்டிகர் 12.8%, மேகாலயா 7.67%, ஜார்கண்ட் 16.48% வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

ஆந்திர மாநிலத்தில் 44.89 லட்சம் வாக்காளர்கள், ஹரியானாவில் 33.83 லட்சம் வாக்காளர்கள், ஒடிசாவில் 20.12 லட்சம் வாக்காளர்கள்,சிக்கிமில் 37,724 வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.

இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணையத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் நீதிமன்ற வழக்குகளை தொடுத்துள்ளது. இருப்பினும் கடந்த மார்ச் மாதம் தேர்தல் ஆணையம் எஸ்ஐஆர் பணியை மேற்கொள்ள உச்ச நீதிமன்றம் அனுமதி அளித்தது குறிப்பிட த்தக்கது.

# நந்தா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் சார்பில் வளாகத்தேர்வு



நந்தா பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் சார்பில் இறுதியாண்டு பயின்று வரும் கணினி அறிவியல் பொறியியல் பிரிவுகளைச் சார்ந்த மாணவர்களுக்கென "கேலிப்ரைன்ட்" நிறுவனத்தின் வளாகத் தேர்வு அண்மையில் நடைபெற்றது.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் தலைவர் வி. சண்முகன் தலைமையில் நடைபெற்ற இவ்வளாகத் தேர்வில் "கேலிப்ரைன்ட்" நிறுவனத்தின் முதன்மை நிர்வாக அலுவலர் சேவியர் பாபு கலந்துக் கொண்டு குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்.

மேலும், பொறியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் யு.எஸ். ரகுபதி, மற்றும தொழில்நுட்பக் கல்லூரியின் முதல்வர் முனைவர் ச. நந்தகோபால் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். பின்னர் "கேலிப்ரைன்ட்" நிறுவனத்தின் முதன்மைநிர்வாகஅலுவலர் சேவியர் பாபு உரையாற்றுகையில், சென்னையினை தலைமையிடமாகக் கொண்டு இயங்கிவரும் எங்களது நிறுவனத்தின் மூலம் ஸ்டார்ட் அப் மற்றும் பெரு காலத்தில் வழங்கி நிறுவனங்களுக்கு தேவையான மென்பொருள்களை குறித்த வருகிறோம் என்றார். குறிப்பாக ஏ.ஐ. பிளாக்செயின் மற்றும் வெப்3 ஆகிய துறைகளுக்கு மென்பொருள் வடிவமைப்பாளர்கள், தர உறுதி வல்லுனர்கள், யு ஐ மற்றும் யுஎக்ஸ் வல்லுனர்களைக் கொண்ட குழுக்கள் அர்பணிப்புடன் கணினி தீர்வுகளை வழங்கி வருவதில் பெருமையடைவதாகத் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில் சிறந்த மென்பொருள்களை உற்பத்தி செய்வதற்காக தங்களைப் போன்ற பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் பயின்று வெளியேறும் மாணவர்களின் தேவையினைக் கருத்தில் கொண்டு இவ்வளாகத் தேர்விற்கு வந்துள்ளதாக மாணவர்களிடம் கூறினார்.

மேலும், சிறந்த மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு முதலில் எழுத்து தேர்வும், அதனைத் தொடந்து குழு விவாதமும் நடைபெறும் என்று அந்நிறுவனத்தின் செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.


இத்தேர்வினை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்த முதல்வர்கள், பேராசிரியர்கள் மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சித் துறையின் ஆசிரியர்களை ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ். நந்தகுமார் பிரதீப், எஸ். திருமூர்த்தி, மற்றும் நந்தா தொழில்நுட்ப வளாகத்தின் நிர்வாக அலுவலர் ஏ.கே. வேலுசாமி ஆகியோர் வாழ்த்தி பாராட்டினார்கள்.

# 'Dialogue, not batons': Jharkhand CM warns parties against misleading youth, politicisation

Jharkhand chief minister Hemant Soren on Sunday warned political parties against allegedly misleading students protesting over recruitment examination irregularities, saying the ongoing stir should not be politicised.

Soren said the government was committed to addressing the protesters' concerns through dialogue and transparency. He stressed that force was not the answer to the students' demands.

"Dialogue, not batons, can solve problems; weapons for enemies at border," the chief minister said, promising justice to exam protesters through a transparent process, reported news agency PTI.



The comments came as the Jharkhand government has begun fresh talks with the protesting aspirants, who have been on agitation for the 16th consecutive day. However, a prominent student faction has described the government's latest outreach as "political manoeuvring". The Jharkhand CM also accused political parties and vested interests of attempting to exploit the students' movement for political gains.

"Political parties trying to mislead youth by spreading lies, misinformation; intellectuals also involved," Soren said. He also alleged that certain vested interests were attempting to disrupt the functioning of the state and its democratic processes.

"Unable to accept state's self-reliance, vested interests working at full force to disrupt democracy here," PTI quoted the chief minister as saying.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.